# பெப்ரவரி – 01 – வெள்ளி

**கென்றி மூர்ஸ்**

**ஆண்டவரை நம்பு: நலமானதைச் செய்: திபா. 37:3**

## முதல் வாசகம் : எபிரேயர் 10 : 32 – 39

சகோதர, சகோதரிகளே முன்னைய நாள்களை நினைவு கூருங்கள். நீங்கள் ஒளி பெற்றபின் உங்களுக்கு நேரிட்ட துன்பம் நிறைந்த போராட்டத்தை மன உறுதியோடு ஏற்றுக்கொண்டீர்கள். சில வேளைகளில், நீங்கள் இகழ்ச்சிக்கும் வேதனைகளுக்கும் ஆளாகி, வேடிக்கைப் பொருளானீர்கள். வேறு சில வேளைகளில், இந்நிலைக்கு ஆளானோரின் துன்பங்களில் பங்குபெற்றீர்கள். கைதிகளுக்குப் பரிவிரக்கம் காட்டினீர்கள். உங்கள் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டபோதும், மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டீர்கள். ஏனெனில் சிறந்த, நிலையான உடைமைகள் உங்களுக்கு உள்ளன என்பதை அறிவீர்கள். உங்களிடம் இருக்கும் துணிவைக் கைவிட்டுவிடாதீர்கள். இதற்கு மிகுந்த கைம்மாறு உண்டு. கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றி, அவர் வாக்களித்ததை நீங்கள் பெற்றுக்கொள்ள உங்களுக்கு மனஉறுதி தேவை. இன்னும், ”மிக மிகக் குறுகிய காலமே இருக்கிறது. வரவிருக்கிறவர் வந்து விடுவார், காலம் தாழ்த்தமாட்டார். நேர்மையுடன் நடக்கும் என் அடியார், நம்பிக்கையினால் வாழ்வு அடைவார். எவராவது பின்வாங்கிச் செல்வார் என்றால் அவரில் நான் மகிழ்ச்சியுறேன்.” நாமோ பின்வாங்கிச் சென்று அழிவுறுவோர் அல்ல. மாறாக, நம்பிக்கையையும் வாழ்வையும் காத்துக் கொள்வோர் ஆவோம்.

**பதில்பாடல் :** ஆண்டவரிடமிருந்தே மீட்பு நேர்மையாளருக்கு வருகிறது.

## நற்செய்தி : மாற்கு 4 : 26 - 34

அக்காலத்தில் இயேசு கூட்டத்தை நோக்கி, ”இறையாட்சியைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். நிலத்தில் ஒருவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமலே நாள்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளருகிறது. முதலில் தளிர், பின்பு கதிர், அதன் பின் கதிர் நிறைய தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சல் அளிக்கிறது. பயிர் விளைந்ததும் அவர் அரிவாளோடு புறப்படுகிறார் ஏனெனில் அறுவடைக் காலம் வந்துவிட்டது” என்று கூறினார். மேலும் அவர், ”இறையாட்சியை எதற்கு ஒப்பிடலாம்? அல்லது எந்த உவமையால் அதை எடுத்துச் சொல்லலாம்? அது கடுகு விதைக்கு ஒப்பாகும். அது நிலத்தில் விதைக்கப் படும்பொழுது உலகிலுள்ள எல்லா விதைகளையும்விடச் சிறியது. அது விதைக்கப்பட்டபின் முளைத்தெழுந்து எல்லாச் செடிகளையும் விடப் பெரிதாகி, வானத்துப் பறவைகள் அதன் நிழலில் தங்கக் கூடிய அளவுக்குப் பெருங்கிளைகள்விடும்” என்று கூறினார். அவர்களது கேட்டறியும் திறமைக்கு ஏற்ப, அவர் இத்தகைய பல உவமைகளால் இறைவார்த்தையை அவர்களுக்கு எடுத்துரைத்து வந்தார். உவமைகள் இன்றி அவர் அவர்களோடு பேசவில்லை. ஆனால் தனிமையாக இருந்தபோது தம் சீடருக்கு அனைத்தையும் விளக்கிச் சொன்னார்.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் ஒளியாகிய கிறிஸ்து இயேசு எங்கள் மத்தியில் குடிகொண்டுள்ளார் என்பதையும், எவ்வாறான துன்பங்கள், சோதனைகள், வந்தாலும் மனந்தளராமல் இறையாட்சிக்குள் செல்ல எங்களை தயார்படுத்த எங்களை அழைத்து நிற்கின்றது. இறைவனுடைய ஆட்சியானது புனிதமானது, தூய்மையானது, நேர்மையானது எனவே நாங்கள் தூயவர்களாக, புனிதமானவர்களாக வாழவேண்டும். கிறிஸ்து பிறந்திருக்கிறார் என்று பலவித ஆடம்பரங்கள், களியாட்டங்கள், குடிவெறி இவ்வாறானவற்றிற்கு அடிமைப்படுத்தப்பட்டு இறைவனைவிட்டு விலகி பாவவாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நற்செய்தியில் பார்ப்பது போன்று ஒருவர் விதைகளை விதைக்கின்றார் அவைகள் வளர்ந்து பலன் கொடுக்கின்றது. இதேபோன்று நாங்களும் பலன் கொடுக்க வேண்டும் என்று இறைவன் எங்களிடமும் எதிர்பார்க்கின்றார். கடுகு விதையானது சிறிதாக இருந்தாலும் அது வளர்ந்து பெரிய மரமாகி வளர்ந்து மற்றவர்களுக்கும் பலன்கொடுக்கின்றது. இவ்வாறாக நாங்களும் வாழவேண்டுமானால் எங்களிலுள்ள தீய சொல், செயல்கள் யாவற்றையும் எம்மத்தியில் இருந்து எடுத்து விடவேண்டும். மனமாறி வாழாமல் வாழ்ந்தோமேயானால் இறையாட்சிக்கள் செல்வது கடினமாகும். மாறாக எமது வாழ்வை செப வாழ்வாக மாற்றுவோமாயின் எமக்கு ஏற்படும் துன்ப துயரங்கள் எதுவாக இருந்தாலும் அவரே எமக்காக யாவற்றையும் ஏற்றுக்கொண்டு எங்களையும் தன்னோடு இறையரசில் இணைத்துக்கொள்வார் என்று விசுவசித்து வாழ்வோம்.